# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2346 - 2023 අගෝස්තු මස 18 වැනි සිකුරාදා - 2023.08.18

*2346 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | 240 |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



239 - B 082484- 353 (2023/08)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

**மக்கள் வங்கி**
**இல.126/MB வழக்கோடு தொடர்புடைய புத்தளம் மாவட்ட நீதிமன்ற இல. 20/2023 இன்கீழ் பிசுக்கால் மூலம் வெளிப்படுத்தும் பெறுமதி வாய்ந்த பகிரங்க ஏல விற்பனை**

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் பதிவுப் பிரிவுக்கு உட்பட்ட கல்பிட்டி கோரளை வடக்கு அக்கரைப்பற்று , கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் கந்தக்குளி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கந்தக்குளி என்ற ஊரில் அமைந்துள்ள முக்குவட்டி தோட்டம் என்ற பெயர்கொண்ட காணிக்கு எல்லைகளாவன.-

வடக்கு: இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;
கிழக்கு: இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;
தெற்கு: இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;
மேற்கு: ஐராங்கனியினுடைய காணி.

ஆகிய எல்லைகளுக்குட்பட்ட பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.19.5பே.) விசாலமுடைய நிலமும் அதனுள் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடம் ஆகிய எல்லாம் அடங்கியவையாகும்.
இது புத்தளம் காணிப் பதிவு அலுவலகத்தில் Q 117/264 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணி கீழ்வரும் முறையில் மீண்டும் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய கல்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கல்பிட்டி பிரதேச சபை எல்லையில் கந்தக்குளிய கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கந்தக்குளி என்ற ஊரில் முக்குத்தோட்டம் என்று அழைக்கப்படும் காணிக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட எம்.எச். சபார் நில அளவையாளர் மூலம் 2015.07.08 ஆந் திகதி மீண்டும் அளவீடு செய்யப்பட்ட இலக்கம் 3460 என்ற நில அளவை வரைபடத்தின் பிரகாரம் பிரிவு 01 நில அளைவை வரைபடத்திற்கான எல்லைகள்-

வடக்கு: ஐராங்கனிக்குச் சொந்தமான காணியும் பிரதேச சபை பாதையும்;
கிழக்கு: கே.ஏ. காந்தி லதா என்பவருக்குச் சொந்தமான காணியும், எஸ்.எச். நிஹால் பர்ணாந்து என்பவருக்குச் சொந்தமான காணியும்.;
தெற்கு: எஸ். டி.என்.பீரிஸ் என்பவருக்கு சொந்தமான காணியும்;
மேற்கு: ஐராங்கனி என்பவரின் காணி;

ஆகிய எல்லைகளாகக் கொண்டு அமையப்பெற்றுள்ள பதினெட்டு தசம் ஏழு பேர்ச் (00ஏ.00றூ.18.7 பே.) விசாலம் கொண்ட காணியின் நிலம், அதனுள் அமைந்துள்ள மரங்கள், கட்டிடம் ஆகிய எல்லாம் உட்பட்டதாகும்.
காணியின் அளவு 00ஏக்கர், 00றூட், பதினெட்டு தசம் ஏழு பேர்ச் .)

இது புத்தளம் காணி பதிவு அலுவகத்தில் கிவ் 117/264 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதனத்திற்குண்டான பிரவேசம்: கொழும்பு - புத்தளம், பிரதான பாதையில் தாலடிய சந்தியில் இடது பக்கத்தில் உள்ள கல்பிட்டி பாதையில் 37 கி.மீ. அளவு தூரம் செல்லும் போது சந்திக்கு குறிஞ்சாம்பிட்டி சந்தியின் இடது பக்கம் திரும்பி 04 கி.மீ. தூரம் செல்லும்போது நீர்தாங்கி வீதி சந்திக்கும். இவ்வீதியின் 200 மீற்றர் முன்னே செல்லும் போது பாதையின் இடது பக்கமாக ஏலவிற்பனை செய்யும் காணி அமைந்துள்ளது.

2023, செத்தெம்பர் 2.00 மணிக்கு காணி அமைய பெற்றுள்ள இடத்தில் பகிரங்க ஏல விற்பனை நடைபெறும்.

பணம் செலுத்தும் முறை: ஏல விற்பனை முடிவில் விலை தீர்வு செய்யப்பட்டபின் உடனே வெற்றிகரமான கொள்வனவாளரினால் கீழ் வரும் முறையில் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 25% ( நூற்றுக்கு இருபத்தைந்து)
2. மாகாண அதிகாரிக்கு செலுத்த வேண்டிய 1% (நூற்றுக்கு ஒன்று)விற்பனை வரி;
3. பிசுக்கால் தரகுப் பணம் சிவில் சட்டக்கோவை 258 ஆம் பிரிவுக்கான பிரிவின்படி தரகுப்பணம்;
4. சகல விதமான பிரச்சார செலவு;

5. எழுது வினைஞர் மற்றும் கூவுவோர் கொடுப்பனவு ரூபா 500.00;
6. ஏல விற்பனை மற்றும் ஏனைய செலவுகள் செய்யப்படின் அதற்கான கொடுப்பனவுகள்;
7. விற்பனவு உறுதிக்கான முத்திரைக் கட்டணம் என்பனவாகும்.

குறிப்பிட்ட சொத்து விற்பனை நீதிமன்ற அனுமதியின் பேரில் நடைபெறும்.

கொள்வனவு விலையின் 75% (நூற்றுக்கு எழுபத்தைந்து) மிகுதி ஏல விற்பனை நடைபெற்ற தினத்தில் இருந்து முப்பது நாட்களுக்குள் மேற்கூறிய வழக்கு இலக்கத்திற்கு இட வேண்டும்.

மேற்கூறப்பட்ட முப்பது நாட்களில் மேல் சொல்லப்பட்ட முழுத் தொகையும் செலுத்தப்படாத விடத்து பணமாக செலுத்தப்பட்ட தொகை திரும்ப மீள் அளிக்கப்படாது என்றும் ஆதனம் மீண்டும் ஏலமிட நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பிட்ட காணிப்பத்திரம் மட்டும் ஆவணங்கள் பற்றிய பரிசீலனை, மேலதிக விபரங்கள் பிரதேச முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், மக்கள் வங்கிக் கட்டிடம், ( முதலாம் மாடி) இல.79, மாரவில வீதி, நாத்தாண்டி என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல.: 032-2253300,032-2253301,
தொலைநகல் (Fax) இல.: 032-2255247.

பதிவாளர்,
பதில் பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்
புத்தளம்.

சிங்கள மொழியிலிருந்து தமிழ்மொழிக்கு என்னால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு உறுதிப்படுத்துகிறது.

08- 974

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.